பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

15 10 2025 6.30

புதன்கிழமை மாலை

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

- கடல்சார் துறையில் இந்தியாவை வல்லரசாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- மீனவர் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.
- நடப்பு நிதியாண்டில் 2 ஆயிரத்து 915 கோடி ரூபாய் கூடுதல் செலவினங்களுக்கான முதல் துணை மதிப்பீடுகள் இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.
- வடகிழக்கு பருவமழை அடுத்த 24 மணிநேரத்தில் தொடங்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Sharma உட்பட 4 பேர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

கடல்சார் துறையில் இந்தியாவை வல்லரசாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்தா சோனாவால் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடல்சார் துறையின் வளர்ச்சிக்காக 80 லட்சம் கோடி ரூபாய்க்கும் கூடுதலான தொகை செலவிடப்படவுள்ளதாக தெரிவித்தார்.

துறைமுகங்களின் சரக்கு கையாளும் திறனை அடுத்த 22 ஆண்டுகளுக்குள் ஆயிரம் கோடி மெட்ரிக் டன் என்ற அளவுக்கு அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருப்பதாகவும் திரு சர்பானந்தா சோனாவால் கூறினார்.

>><><><><><<

மீனவர் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

இன்று ராமேஸ்வரத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – முருகன் 1 – 55 செகண்ட்ஸ்)

திருவனந்தபுரத்தில் இருந்து மதுரை வரை இயக்கப்பட்டு வந்த விரைவு ரயில், ராமேஸ்வரம் வரை நீட்டிக்கப்படுவதாகவும் டாக்டர் எல் முருகன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – முருகன் 2 – 54 செகண்ட்ஸ்)

>><><><><><<

நடப்பு நிதியாண்டுக்கான 2 ஆயிரத்து 915 கோடி ரூபாய்க்கான முதல் துணை மதிப்பீடுகளை நிதியமைச்சர் திரு தங்கம் தென்னரசு இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார்.

இதில் புதிய பேருந்துகளை வாங்குவதற்காக கூடுதலாக 471 கோடி ரூபாய் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><><><<

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் குடிநீர் வசதியை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த நீர்தேக்க தொட்டிகளுக்கு பதிலாக, புதிய நீர்தேக்க தொட்டிகள் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு கே என் நேரு கூறியுள்ளார்.

இன்று பேரவையில் கேள்விநேரத்தின் போது இதனைத் தெரிவித்த அமைச்சர், இதன் மூலம் கூடுதல் குடிநீர் வழங்கப்படும் என்று கூறினார்.

>><><><><><<

கரூர் உயிரிழப்பு சம்பவத்திற்கு திமுகவின் அலட்சியமே காரணம் என்று அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கரூர் உயிரிழப்பு சம்பவம் தொடர்பான விசாரணையை சிபிஐக்கு மாற்றி உச்சநீதிமன்றம் சரியான தீர்ப்பினை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதற்கிடையே, கரூர் உயிரிழப்பு சம்பவம் குறித்து திரு எடப்பாடி பழனிசாமி தவறான தகவல்களை தெரிவித்துள்ளதாக மாநில அமைச்சர் திரு ரகுபதி கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் திமுக அரசு வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

>><><><><><<

மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், விண்ணப்பம் கொடுத்த 15 நாட்களில் குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்வோம் என்ற வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

மழை வந்தால் வெள்ளத்தில் மிதப்பதும், மழை நின்றவுடன் குடிநீருக்கு அல்லாடுவதுமே தாம்பரம் உள்ளிட்ட பல ஊர்களின் அவல நிலையாகி உள்ளது என்று திரு நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

>><><><><><<

வடகிழக்கு பருவமழை அடுத்த 24 மணிநேரத்தில் தொடங்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் – 45 செகண்ட்ஸ்)

>><><><><><<

மாவட்டச் செய்திகள்

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே உள்ள படுக்கப்பத்து அரசு மேல்நிலைப் பள்ளியில் விண்வெளி வாரத்தை முன்னிட்டு இஸ்ரோ சார்பில் அமைக்கப்பட்டு இருந்த ராக்கெட் மாதிரிகளை ஆட்சியர் திரு இளம்பகவத் மாணவர்களுடன் பார்வையிட்டார்.

----------------------

மதுரை மாவட்டத்தில் மரம் வளர்ப்பு தொழில்நுட்பம் குறித்த பயிலரங்கை ஆட்சியர் திரு பிரவீன் குமார் இன்று தொடங்கி வைத்தார்.

----------------------

விழுப்புரம் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரஹ்மான் இன்று தொடங்கி வைத்தார்.

----------------------

காஞ்சிபுரம் மாவட்டம் குன்னவாக்கம் மற்றும் தோட்ட நாவல் ஊராட்சிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று ஆய்வு செய்தார்.

----------------------

நாமக்கல்லில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

----------------------

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கலைத் திருவிழாவில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

>><><><><><<

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Sharma காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர் 15-12, 15-7 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் Oei Louisa Jovanka Sandi Winarto – ஐ வென்றார்.

Unnati Hooda, Rakshitha Sree, Talasala ஆகியோரும் மகளிர் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

Bhavya Chhabra – Vishakha Toppo இணை கலப்பு இரட்டையர் பிரிவில்காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Irvin Arokia Walter இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 18-21, 21-13, 21-13 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் Jack Yu -ஐ வென்றார்.

-----------------------------

ஜோஹர் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா தற்போது ஆஸ்திரேலியாவை எதிர்த்து ஆடி வருகிறது.

மலேசியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் சற்றுமுன் வரை இருஅணிகளும் கோல் இன்றி சமநிலையில் உள்ளன.

>> End of News <<